ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1807/11 - 2013 අප්‍රේල් මස 23 වැනි අඟහරුවාදා - 2013.04.23
1807/11 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1990 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, நிதி நியதிச் சட்டம்*

**76 (2) ஆம் பிரிவின் கீழான கட்டளை**

மேல் மாகாண மாகாண சபையினால் 1990 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, நிதி நியதிச் சட்டத்தின் 76 (2) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மேல் மாகாண முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், நீதி, ஒழுங்கு, காணி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கல்வி, மின்சக்தி, மின்வலு, மனிதவலு, தொழிற்துறை, வியாபார, பொருளாதார மேம்பாட்டு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இந்நியதிச் சட்டத்தின் 39 (4) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்க அரசில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் அல்லது குடியரசிற்காக அல்லது குடியரசின் பெயருக்கு எழுதிக் கையொப்பம் இடப்படும் ஏதேனுமொரு ஒரு அசைவற்ற சொத்து மாற்றலுக்குப் பொருத்தமான ஏதும் சாதனம் தொடர்பாக எந்தவித முத்திரைக் கட்டணமும் அறவிடப்படுவது இல்லை என்று திருப்திகரமான முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டமையால் குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் இக்கட்டளையானது வர்த்தமானப் பத்திரிகையின் மூலமாக வெளியிடப்படும் திகதியிலிருந்து குறிப்பிடப்பட்ட ஐக்கிய அமெரிக்க அரசினால் அல்லது அதற்காக அதன் பெயருக்கு எழுதிக் கையொப்பமிடும் இலக்கம் 148, காலி வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் கொள்வனவு செய்வதற்காக முத்திரைக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்படல், நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சரும் நிதி, திட்டமிடல்,
நீதி, ஒழுங்கு, காணி, உள்ளூராட்சி, மாகாண
நிர்வாகம், கல்வி, மின்சக்தி, மின்வலு, மனிதவலு, தொழிற்துறை,
வியாபார, பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் காரியாலயம்,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 7,
2013, ஏப்பிறல் 23.

5 - 198


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.